பல்லவர் தலைநகரில் வெள்ளம்போல் திரண்டனர்!

பாசறையில் பல்லாயிரவர்

(:0:)

கழகக் காளையரின் கனல் கக்கும் பேச்சு

(0)

காஞ்சி மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சி

காஞ்சி, டிச. 23—

இன்று காலை அழகாக அமைக்கப்பட்ட அரங்கசாமி பந்தலில் தோழர் கே. ஆர். செல்லமுத்து அவர்களின் இன்னிசையுடன் காலை 10 மணி அளவில் மாநாடு இனிது துவங்கியது. அழகாக அலங்கரிக்கப்பட்ட மேடையின் மீது வருங்கால திராவிடத்திற்கான வழிகளை வகுக்கும் வீரர்களைப்போல, தோழர்களான இரா. நெடுஞ்செழியன், மதியழகன், கஜேந்திரன், கணியூர் முருகேசன், குறிஞ்சிப்பாடி சாம்பசிவன், பொன்மலை பராங்குசம், திருச்சி சாம்பு, கோவை ராஜமாணிக்கம், டி. சண்முகம், முத்து, சத்தியவாணிமுத்து, கே. கோவிந்தசாமி, ஏ. வி. ராஜன், கண்ணபிரான், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி என். வி. நடராசன், தில்லைவில்லாளன். அறிஞர் அண்ணா, டி. எம். பார்த்தசாரதி, அப்பாதுரை, அலமேலு அப்பாதுரை, கண்ணதாசன் டப்ள்யூ கே. தேவராசன், காஞ்சி மணிமொழியார், சேலம் சித்தையன், சோமசுந்தரம் முதலியோர் வீற்றிருந்தனர்.

வெளியூரிலிருந்து வந்திருந்த ஏராளமான பிரதிநிதிகளுக்குத் தனித்தனியேதங்கஇடவசதி செய்யப்பட்டிருந்தது. உணவு வசதியும் சிறப்பான முறையில் அமைந்திருந்தது போற்றத் தக்கது.

வரவேற்புரைக்குப் பிறகு கருணாநிதி சொற்பொழிவாற்றினார். மாலை இசைக் கலைஞர்கள் செல்லமுத்து ஹனிபா இவர்களின் இசை அரங்கு நடைபெற்றது. இத்துடன் பிற்பகல் நிகழ்ச்சி முடிவுற்றது.

பிறகு நிகழ்ச்சியில் கண்டபடி இரவு நாடகத்திற்கு மாலை 8 மணி முதலே காஞ்சியே கண்டிராத அளவுக்கு மக்கள் கூட்டம் கூட்டமாக மாநாட்டுப் பந்தலை நோக்கிவந்து கூடினர். இரவு 10 மணிக்கு கே. ஆர். ஆர்.—சி.என். ஏ. குழுவினரால் "சந்திரமோகன்" நாடகம் சிறப்பான முறையில் நடித்துக் காண்பிக்கப்பட்டது. பெருவாரியான மக்கள் கூட்டம் பந்தல் நிறைய இருந்து அமைதியாக நாடகம் பார்த்தது பாராட்டத் தக்கது. (மற்ற விவரம் நாளை)

சுவரில் எழுதியதாக வழக்கு

— —

திராவிடத் தோழர்கள் விடுதலை

திருவாரூர், டிச. 20—

இவ்வூரில் 13-8-50 இரவு கமலாலயம் மேல் கரையில் உள்ள சுவரில் கம்யூனல் ஜி. ஓ.-வை ஆதரித்து எழுதியதாக போலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் மு. கருப்பையன் (திருவாரூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக துணைச்செயலாளர்) கிருஷ்ணசாமி, பாலகிருஷ்ணன் ஆகிய மூவரையும் நிறுத்தினார்கள். தோழர்கள் மூவரும் தாங்கள் குற்றவாளிகளல்ல என எதிர் வழக்காடினர். 3 அல்லது 4 மாதவரை போலீஸ் தரப்பினர் காலம் கடத்தியும்கூட போதிய காரணங்கள் காட்டி வழக்கை நிரூபணம் செய்ய முடியாமல் போகவே வழக்கு தள்ளப்பட்டது.

Regd: No. M. 5458 Phone No. 4502

விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 24—12—50 | மணி 22

கதரணிந்தவர்களே கள்ளமார்க்கட் செய்பவர்

—:0:—

நாட்டிலே நடக்கும் நற்செய்தி

—0—

நகைப்பதா—நாணுவதா?

மதுரை, டிச. 24—

நாடு சுதந்திரமடைய உழைத்தவர். உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்த தியாகி கதர்தவிர கண்ணெடுத்தும் பாராத காந்தி பக்தர். அவரின் தியாகச் செயலைப் பாராட்டி மக்கள் சார்பிலே 5 ஏக்கர் நிலம் மந்திரிகளால் அளித்து அருளப்பட்டவர். நகர மக்களால் கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். நகர நிர்வாகத்திலே மக்கள் பிரதிநிதியாக அங்கம் வகிக்கிறார். மக்களின் நலனையே நினைவில் கொள்பவராக நினைத்து மகிழ்ந்து நடித்துக் கொள்பவர். அவர் மனம் கோணாமலும், வாழ்க்கைத் துன்பம் நிறைந்ததாக இருக்கக்கூடாது என்பதற்காக பங்கீட்டுக் கடையையும் அளித்துள்ளனர். ஓயாது பணிபுரிகிறார் பணத்திற்காக? கோடிக்கணக்கிலே சேர்த்துக் குவிக்க? இவர் பெயர் வெள்ளைச்சாமி பிள்ளை. அரிசி விநியோகத்திலே அன்பரைப் போன்றவர் கிடைப்பதரிதெனும் பேச்சு குமுறுகின்றது நகர மக்களிடையே!

18-12-50 மாலை 3¼ மணிக்கு இருபெண்கள் மூலமாக ¾மூட்டை பங்கீட்டுச் சர்க்கரையை கள்ளத்தனமாகக் கடத்தியபோது, ரேஷன் வாங்கச் சென்ற ஷை வார்டு கைலாசபுரம் தெரு மக்களும், வழிபோக்கர்களும் பிடித்து இந்திய தேசிய டிரேடு யூனியன் காங்கிரஸ் மதுரை கிளை அலுவலகம் சென்று, அங்கிருந்து ரேஷன் அதிகாரியிடம் சீனியுடன் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

அதே இரவு 10¼ மணிக்கு ஷை ரேஷன் கடைக்குப் பக்கத்து அறையில் 41½ வீசை அதே ரேஷன் சீனி பிடிபட்டு, ஆர். ஓ. ரேஷன் ஆபீஸர், கிளார்க், செக்கிங் இனிஸ்பெக்டர், 1, 2 வார்டு செல்லூர் பஞ்சாயத்தார், ஷை வார்டு கைலாசபுரம் பிரமுகர்கள் அனைவர் முன்னிலையில் பதிவு செய்து, ரேஷன் ஆபீசில் குற்றம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதாம். நாம் சில நாட்களுக்கு முன்தான் 'சமூக துரோகிகளே கதர் அணிபவர்! என்று சொன்னோம்.

நாட்டிலே இன்று நாடாள்பவர் ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டிலே தீர்மானித்தபடி நிர்வாகத் திறமை அற்றவர்களாகவும், பதவிப் பித்துள்ளவர்களாகவும், சுயநலமிகளாகவும் உள்ளனர். காரணம் நாம் காங்கிரசை நம்பியதால், காங்கிரசார்கள் நாட்டு சுதந்திரத்துக்குப்பாடுபடுவதாகச் சொன்னார்களே தவிர, அதற்குப் பிறகு மக்களின் நிலையை மாற்றியமைக்க அவர்களுக்குத் திட்டமில்லை. குருட்டு நம்பிக்கைவாதிகள் நிறைந்துள்ள சபை. முற்போக்கு எண்ணம் தோன்றாதவர்கள் இதனலன்றோ இவ்வளவு

(3ம் பக்கம் பார்க்க)

வட கொரியர்களிடம் 15 டிவிஷன்கள்!

(:0:)

38-வது அக்ஷரேகை எல்லையில் போர் நடக்கிறது

டோகியோ, டிச. 23—

வட கொரியர்கள் ஏராளமாக படையைச் சேர்த்து விட்டார்கள் என்றும் அவர்களிடம் குறைந்தது 15 டிவிஷன்கள் இருக்கின்றனவென்றும் கூறப்படுகிறது. 15 டிவிஷன்கள் என்றால் சுமார் 1,50,000 பேர் என்று சொல்லலாம்.

ஹங்னம் என்ற இடத்தில்தான் சீனத் துருப்புகளுக்கும் அமெரிக்க துருப்புகளுக்கு மிடையே போர் நடைபெறுகிறது. 28 வது அக்ஷரேகை எல்லையில்தான் மும்முரமாக சண்டை நடைபெறுகிறது எனக் கூறலாம்.

ரஷ்யாவுக்கு உரோமம் அனுப்புவதை ஆஸ்திரேலியா நிறுத்தும்

—

சிட்னி, டிச. 23—

ராணுவ முக்யத்துவமுள்ள பொருள்கள் எல்லாவற்றையுமே ரஷ்யாவுக்கு அனுப்புவதை நிறுத்தி விடுவதென்று ஆஸ்திரேலியா தீர்மானித்திருக்கிறது. முக்கியமாக உரோமம் நிறுத்தப்படும். இதுவரை ரஷ்யா ஏராளமான ரோமத்தை வாங்கியுள்ளது.

பொய் சொல்லத் துணிந்துவிட்ட அரசாங்கம்

(o)

மலபார் போலீசை நம்பிக்கிடக்கும் பரிதாபநிலை

(o)

வகுப்புகள் வேண்டாமென்பது வகுப்புவாதமா?

(o)

வடநாட்டார் பலகாரக்கடை என்று விளம்பரப்படுத்துவது தேசியம்போலும்!

காஞ்சி மாநாட்டு தலைமையுரை

(நேற்றைய தொடர்ச்சி)

வகுப்புவாதம் பேசுகிறோமாம் எது வகுப்புவாதம்—வகுப்புகள் வேண்டாமென்று சொல்வது வகுப்பு வாதமானால், திருச்சி, தஞ்சை ரயில்வே சந்திப்பில், வடநாட்டான் பலகாரக் கடை, (North Indian sweet meat Stall) என்று விளம்பரப் பலகை போட்டு வியாபாரம் செய்ய லைசென்ஸ் அளித்திருக்கிறதே சர்க்கார். அது என்ன வாதம்? திமிர் வாதமா?

'சோறுடைத்து சோழவளநாடு' என்ற பெருமைக்குரியவன், புளியங்கொட்டையை, பருத்திக்கொட்டையை, கத்தாழையைத் தின்று காலங்கழிக்கின்றான்! கைத்தறிக்காரரெல்லாம் கடுமையான வெய்யிலில் காட்டில் கட்டை வெட்டுகின்றனர் அருமையாக ஈன்றெடுத்த குழந்தைகளைத் தாய்மார்கள் பகிரங்கமாக விலை கூறி விற்கின்றனர். காங்கிரஸ் தலைவர்களிலேயே சிலர் அந்தக் குழந்தைகளை விலைக்கு வாங்கி இருக்கின்றனர்.

இந்தக் கொடுமைகள் மாற நமக்குள்ள ஓரே வழி பிரித்துக்கொள்வதுதான் என்றால் பாகிஸ்தானிடம் பணம் வாங்கிக்கொண்டு திராவிடஸ்தான் கிளர்ச்சியைத் தொடங்கி இருக்கிறார்கள் என்று உளறிக் கொட்டுகிறது ஒரு கும்பல்.

அப்படியானால், நாமும் சுலபமாகச் சொல்லிவிடலாம். பார்ப்பனரிடமும், பண்டாரச் சன்னதிகளிடமும் கூலி வாங்கிக்கொண்டு பிதற்றுகின்றன இந்த மாமிசப்பிண்டங்கள் என்று. திராவிடஸ்தான் எப்போது கேட்கப்பட்டது என்ற அரிச்சுவடியே அறியாத அப்பாவிகளிடம் நாம் விவாதிப்பது வீண் வேலை. நமக்குச் சட்ட உரிமை வேண்டும். அந்த சட்டத்தில் மனித ஜீவாதாரமான உரிமைகள் அடங்கியிருக்க வேண்டும்.

சட்டம்

சட்டம் அதற்கு இடங்கொடுக்கவில்லையானால் மாற்றி எழுது. இமய மலையா அசைக்க முடியா திருக்க. கூட்ட, குறைக்க, திட்ட, திருத்த, துண்டிக்க, துணை சேர்க்க மக்களுக்கு உரிமையுண்டு; மக்களுக்காகத்தான் சட்டமே தவிர சட்டத்திற்காக மக்களல்ல.

இன்றைய நிலையில், அரசாங்கம் செய்கின்ற அக்கிரமங்களை மறைக்கும் திரையாகத் தொங்குவதுதான் சட்டமாக இருக்கிறது. அதை அழுக்குப் படியாமல் அன்றாடம் வெளுத்துக் கொடுப்பவர்கள்தான் அல்லாடி போன்றார்கள். அந்த அழுக்கு மூட்டைகளை சுமந்து செல்லுபவைதான், பிறவி பேதம், புராணம், மதம், சடங்கு, சம்பிரதாயம், தலைவிதி, கருமம் என்ற (கழுதைகள்) அல்லது வண்ணான் வாகனங்கள்.

அவைகளைத் திருத்தி செம்மைப் படுத்தினாலன்றி நாட்டில் அமைதி நிலவுவதென்பது குதிரைக் கொம்பாகும்.

பொய் சொன்ன சர்க்கார்

எந்த அரசாங்கமும் பொய் சொல்லத் துணியாத அளவுக்கு நமது சர்க்கார் பொய் சொல்லவும் துணிந்துவிட்டது பஞ்சாப் படுகொலை நடத்திய ஜெனரல் டயரும், காந்தியாரைக் கொன்ற கொலைகார கோட்சேயும் கூட நீதி மன்றத்தில் உண்மையை ஒப்புக்கொண்டார்கள். ஆனால் நமது அரசாங்கம் மேல் நாட்டிலிருந்த பொய்யர் சங்கத்தையே வெட்கித் தலைகுனிய வைத்திருக்கிறது.

நமது தோழர் ஆசைத்தம்பி அவர்களுடைய முடியைத் திருச்சி மத்திய சிறை குவாரண்டைனில் 22—7—50ல் சிறைத்துத் தள்ளி, 22—11—50ல், நாங்கள் அப்படிச் செய்யவில்லை என்று சர்க்கார் சொல்லுகிறது. அவர் மொட்டை அடித்த தலையுடன் வெளியே வந்தார்! அவரை அந்தக் கோலத்திலேயே புகைப்படம் பிடித்துத் திராவிடநாடு இதழில் வெளியிட்டிருந்தது உங்களுக்கு நன்றாக நினைவிருக்கும். ஆனால், அந்தச்சம்பவம் நடந்து நான்கு திங்களுக்குப் பிறகு, ஒரு திங்களில் ஒரு அங்குலம் வளரலாம் என்று கணக்கு வைத்து 4 திங்களுக்கு 4 அங்குலம் வளர்ந்து அவர் ஒழுங்காக கிராப்பு சீவி விட்டுக் கொண்டதை C. I. D.க்கள் மூலம் தெரிந்துகொண்ட பிறகு 'நாங்கள் மொட்டையடிக்கவில்லை', என்று தைரியமாக மார்தட்டிசொல்லமுன் வந்திருக்கிற சர்க்காரின் வீர தீரப் பராக்ரமத்தைப் பாருங்கள். அதன் விவேகமற்ற செய்கையையும், வீணான ராஜதந்திரத்தையும் கண்டு நாம் எள்ளிநகையாடுகிறோம்! வெட்கம், என்று கேட்போரை சொல்லத் தூண்டும். உதட்டின் ஓரம்வரையில் சிரிக்கிறான் உண்மையும் நேர்மையுமுள்ள காங்கிரஸ் தொண்டன்.

அஞ்சப்போவதில்லை

ஆனால், இதற்கே நாம் அஞ்சப் போவதில்லை, ஏனெனில் தேர்தல் நெருங்க நெருங்க, நமது கூட்டங்களுக்கு ஆட்கள் அதிகமாகச் சேர நமது நூல்கள் கடைகளில் விற்பனை ஆக ஆக, நமது கதைகள் காட்சிகளில் அதிக நாட்கள் ஓட ஓட, அவர்கள் ஆத்திரம் அதிகமாய், அதுவே வெறியாக மாறி, நம் போன்ற தொண்டர்களை சிறையிலே தள்ளி சாகடித்து, 'எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சொன்னாலும் சொல்வர்! அந்த மந்த மதியில், விளக்கமில்லாத முறையில், தெளிவில்லாத போக்கில் கேலியும் கிண்டலுமே மேடைப் பேச்சு. மலபார் போலீஸ் ஒன்றுதான் மணிமுடி தரும் மக்கள் கூட்டம் என்று நினைத்துக்கொண்டு மலபார்போலீசையேநம்பிப்போய்க் கொண்டிருக்கின்றது இன்றையஜன நாயகசர்க்கார். தாராளமாகசெய்யட்டும் ஆனால், அதன் காரணமாக இங்குள்ள மலையாளிகளை மக்கள் வெறுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் எவ்வகையிலும், திராவிட முன்னேற்றக் கழகம் உத்தரவாதமாக முடியாது என்பதை சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கின்றோம்.

நேர்மைக்கு வெகுதூரம்

ஒரு பொறுப்பான அரசியல் கட்சி, அதுவும் சர்க்காரை நடத்தும் கட்சி, மற்ற அரசியல், சமுதாயக் கட்சிகளோடு நடந்து கொள்ளவேண்டிய மரியாதை முறையிலிருந்து வெகுதூரம் ஒதுங்கிப் போய்விட்டது, என்பதற்கு எடுத்துக்காட்டு தோழர் என். வி. நடராசனை சிறையிலிருந்து நீதி மன்றத்திற்கு கையில் விலங்கிட்டு அழைத்துச் சென்ற ஒரு நிகழ்ச்சியே போதுமென்று நினைக்கின்றேன். உடல் மெலிந்த தோழர் நடராசனுக்கே விலங்கிட வேண்டிய நிலை ஏற்பட்டால், இன்னும் கொஞ்சம் உடல் வன்மை பெற்ற பெத்தாம்பாளையம் பழனிச்சாமி போன்றவர்களை வெளியே அழைத்து வருவார்களோ, அல்லது நீதி மன்றத்தையே சிறையில் தள்ளி விசாரிக்கச் செய்வார்களோ என்னவோ தெரியாது.

இவைகளுக்கெல்லாம் ஏதாவது சப்பைக் காரணங்களைக் காட்டி, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் மொட்டையடித்தல், விலங்கிடல் முதலானவைகளைச் செய்ய முடிகிறதே தவிர, சட்ட ரீதியான காரணங்களை அவர்களால் இது வரைக் காட்ட முடியவில்லை. சாக்கு வைத்துப்பேசுவது சர்க்கார் செய்யவேண்டிய கௌரவக் காரியமல்ல, சந்தியில் நிற்கும் காத்தாயி செய்யவேண்டிய கேவல வேலை.

நமது கடமை

எதுஎப்படியிருந்தாலும், நம்முன் நிற்கும் வேலைகள் வானுயர இருக்கின்றன. கடமைக் காலக் கருவியை நோக்கி நிற்கின்றது. நடக்கவேண்டிய பாதை வெகுதூரம், இதற்கு முன் நமக்கிருந்த எதிரிகள், மதவாதிகளும், பணக்காரர்கள் மட்டிலுந்தான். ஆனால் இப்போது பலமான சர்க்கார், பாராளுமன்றம், டில்லி, வடவர், வாணிபவல்லூறுகள், மதம், புராணம், சாத்திரம், இதிகாசம் ஆகிய அவ்வளவு கடும்புயலை, கடப்பாறையை, கடுமையான பனியை கார்மேகங்களை, கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப்பாதையைக் கடக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அந்தவழியும் நமக்கு இருளாகத் தெரியாமல் சுடர்போல இருக்க வேண்டிய ஆயுதம் செய்தித்தான். தன்னலங்கருதாத பொதுத் தொண்டு, சலியாத உழைப்பு, ஆகியவைகள் அதற்கடுத்த படியாகும். தலை நகரில் என்ன நடந்தது என்பதை தலைமன்னாரில் தெரிந்து கொள்ள ஒருவாரம் பிடிக்கிறது. மிக மிகப்பரிதாபத்துக்குரியசெய்தியாகும். இயக்கவேலைகள் எவைத் தடைப்பட்டாலும், முதன் முதல் தினப்பத்திரிகைத் தொடங்காமல் தீவிர வேலையில் ஈடுபட்டுப் பெறுகிற வெற்றி காட்டில் காய்ந்த நிலவாக, நிலைக்குவராத செய்தியாக, கூர்மழுங்கிய வாளாகப் போய் விடுகிறது

ஆகவே நமது அண்ணாவும், பொதுச் செயலாளருமான தோழர் அண்ணாதுரை அவர்களை தினப்பத்திரிகையை வெளியே கொண்டுவர எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியைத் தீவிரப்படுத்தும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாநாடுகள்

இதைப் போன்ற மாநாடுகள் கூட்டுவதன் நோக்கம். மாவட்டத்தில் உள்ள பல தோழர்கள் ஒன்றாகக் கூடி, அவரவர்கள் பகுதியிலே செய்த வேலைகளையும், சேர்த்திருக்கின்ற உறுப்பினர் தொகைகளையும், நடந்த கூட்டங்களையும், பேசிய கருத்துக்களையும் ஒத்திட்டுப் பார்த்துக் கொள்வதற்கும், நமது இயக்கத்தின் செலவாக்கை சர்க்காருக்கு எடுத்துக் காட்டவும் ஒரு கருவியாக அமையும் என்பதினாலேதான்.

இன்னும் நமது ஆசை, நமது இயக்கம் ஒரு சர்க்காரைப்போல இயங்கவேண்டும். ஆனால் நமது சர்க்காரைப்போலல்ல. பிரிட்டிஷ் பாராளுமன்றம்போல. ஏனெனில், அந்த சட்டசபையில்தான் யாரும் உறங்கமாட்டார்கள். நேரங்கழித்து வரமாட்டார்கள். தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசமாட்டார்கள். அந்த முறையில் நமது கழகத்தை மாகாண மாநாட்டின் பிறகாவது அமைக்க நீங்கள் பேருதவியளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வணக்கம்

குழந்தையின் விலை ரூ. 15

—(o)—

வ று மை யி ன் கொ டு மை

சென்னை, (தி. நகர்)டிச. 18— தியாகராய நகரில் 18-12-50ல் குப்புசாமி நாய்க்கர் என்பவர் தன் குழந்தையை விலை கூறிக்கொண்டு வந்தார். துரைவேல் என்பவர் ரூ. 15க்கு அக்குழந்தையை வாங்கிக்கொண்டார். இது நமக்குக் கிடைத்துள்ள செய்தி. தனக்கே உணவில்லை, குழந்தையை எங்கே காப்பாற்றுவது என்ற முடிவினால் இப்படிப்பட்ட செய்கையில் இறங்க முற்பட்டுவிட்டனர் நாட்டு மக்கள். வறுமை அவ்வளவுக்குத் தமிழ் நாட்டை பிடித்துக்கொண்டது. கனம்களோ காரில் உல்லாசமாக உலவி ஊருக்கொரு கோயில் திறந்துகொண்டும், திருக்குளம் வெட்டப் பிரசாரம் செய்துகொண்டும், நடமாடுகின்றனர்.

உளத்தைப் புண்ணாக்காதீர்

தென்காசி. டிச. 19— நாட்டிலே மனிதன் படுகின்ற அல்லல்கள் அதிகம். எத்துறையிலும் இடர்ப்பாடு அடைகிறான். இந் நிலையில் அதிகாரிகளாவது நாட்டுமக்களிடம் அன்பாக நடந்து கொள்ளவேண்டும். வேதனைப்படுகிற உள்ளத்திற்கு ஆவேசத்தை ஊட்டக் கூடாது. இந்தக் காலத்தில் குறிப்பாக தமிழ்நாட்டில் அதிகாரிகள் கடமையுணர்ந்து, அன்பாக நடக்க முயலவேண்டும். இதை பிரதமர் ராஜாவே சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். அதற்குப் பிறகும் அதிகாரிகள் அத்துமீறி நடக்கிறார்களென்றால் அழிவுக்கு அச்சாரம் இடுபவர்களாகத் தான் கருதுகிறோம்.

19-12-50-ல் தென் காசிக்கு திருநெல்வேலி மாவட்ட டெக்ஸ்டைல் அதிகாரி அவ்வூர் சோமசுந்தரம் பிள்ளை வீட்டிற்கு வந்திருந்தாராம். நெசவாளர்கள் தூதுக் குழு தங்கள் முறையை எடுத்துச் சொல்லி பரிகாரம் கேட்டார்கள். அதற்கு அதிகாரி "நீங்கள் பேப்பர் பார்க்கிறீர்களா இல்லையா? திருநெல்வேலியில் நெசவாளர்களுக்குக் கூறிய பதில்தானே உங்களுக்கு வேறே பதில் சொல்ல வேண்டுமா" என்றாராம். இதிலிருந்து அவ்வதிகாரியின் பதட்டம் வெளிப்படுகிறது. அவ்வதிகாரி அல்லல் காரணமாக அனுப்பப்படாதவராக இருக்கலாம், இருந்தாலும், அதைவிட வேதனைப்படும் நெசவாளர்களுக்கு இந்த நாட்டிலே அன்பான பதிலும், ஆதரவும் தர வேண்டுமென்பதை அதிகாரி அறிய வேண்டும்.

அதிவேகமாக செல்லும் விமானங்களுக்கு ராக்கேட் மோட்டார்கள்

லண்டன், டிச. 23— அதிக வேகமாக செல்லும் விமானங்களுக்கு ராக்கெட் மோட்டார்கள் பொருத்தப்படும் என்று ஹாவிலண்ட்டெஸ்ட் பைலட் ஸ்ரீடொரி கூறுகிறார்.

தமிழர் திருநாள்

அம்மையை ஐயன் மணம் செய்துகொண்ட நாளல்ல, ஆவுக்கு மோட்சம் அளித்த நாளல்ல, சூரனைக் கொன்ற விழாவல்ல, தாளில் வீழ்ந்து தட்சணை தரவேண்டிய நாளல்ல, தமிழரின் தனித்திருநாள் இது- தவறிய பாதையில் புகுந்த தமிழர் வழக்கமாகக் கொண்டாடும் பலரகப் பண்டிகைகள் போன்றதல்ல.

—அறிஞர்-அண்ணா.

உண்ணாவிரதத்தில் புது ரிக்கார்ட்

பீடர் வமஸர் என்பவரின்வெற்றி

சென்ற ஜூன் மாதத்தில் மஹீந்திர வர்மா என்பவர் ஒரு கண்ணாடிப் பெட்டியில் 53 தினங்கள் உண்ணாவிரதம் இருந்து ரிக்கார்ட் ஏற்படுத்தியது நினைவிருக்கும்.

இவர் உண்ணாவிரதமிருந்த காலத்தைவிட 4 மணி 5 நிமிஷ நேரம் அதிகமாக உண்ணாவிரதமிருந்து இந்த ரிக்கார்டை பீடர் வமசர் என்பவர் தகர்த்தெறிந்திருக்கிறார்.

இந்த 17½ வாரகாலத்தில் பீடர் [illegible] தினம் மூன்று புட்டி தண்ணீரும் 30 சிகரெட்டும் உபயோகித்திருக்கிறார். உண்ணாவிரதம் நின்றபின் இவருடைய மொத்த இடையில் 75 பவுண்ட் குறைந்திருந்ததாம்.

மதுரை மாணவர்களுக்கு வேண்டுகோள்

மாவட்ட மாணவர் கழகம் சமுதாய ஆக்க வேலை செய்ய இருப்பதாலும், மாவட்டமெங்கும் மாணவ முன்னேற்றக்கழகங்களை அமைத்து சமுதாய முன்னேற்ற வேலையைத் தொடர்ந்து நடத்தவும், அமைக்கப்பட்டிருக்கின்ற கழகங்களையும் நிர்வாகஸ்தர்களையும்பற்றிய குறிப்பை ஜனவரி மாதத்திற்குள் அறிவித்தால் மாவட்ட மாணவர் அமைப்பு நடத்த வசதியாயிருக்கும் என மதுரை திராவிட மாணவர் முன்னேற்ற மறுமலர்ச்சி மன்றம் செயலாளர் குலாம்தீன் அறிவிக்கிறார்.

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

29, 30—12—50

நாஞ்சில் (நாகர்கோயில்)

தி. மு. க. முதல் மாநாடு.

31—12—50

வளவனூர்

மா. இளஞ்செழியன்,

அக்கிப்பேட்டை (பேங்களூர் சிடி):

சி. பி. சிற்றரசு, புலவர் மணி, எழிலன், அ. கு. பஞ்சாட்சரம்.

அணி அணியாய் வாரீர்!

'மான்'

திபெத்தினில் வியட்நாமில் கொரியாநாட்டில்
தீமைப்போர் தலைகாட்டும் இடத்திலெல்லாம்
சமத்துவமாய்ச் சமநீதி வேண்டுமென்று
சங்கநாதம் முழக்குகின்றார் மக்கள்எல்லாம்.
விண்ணேறிப் பறக்குமொரு கொடியின்கீழே
கீழ்நாட்டார் வீழ்ந்தடிமையாய்க் கிடப்பாரென்ற
எண்ணமின்னும் தொலையவில்லை மேற்குநாட்டில்
எனவேதான் ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுபாடுகின்றார் !

முடைதீர்ந்து வையமெல்லாம் முன்னேறித்தன்
முழுஉரிமை காக்குமிந்த நல்லநாளில்
படைபலத்தால் பணபலத்தால் பிறரையாளப்
பகற்கனவு காணுகின்ற பேய்கட்கெல்லாம்
கொடுக்கின்றார் சவுக்கடிகள் அடடாஅங்கே
குதிக்கின்றாள் நீதித்தாய் பாராய்தோழா!
சடைமுடிகள் தரைஉருள வேண்டும்மக்கள்
சமம்என்ற கொடிவிண்ணில் பறக்கவேண்டும்!

பிணியுடைய திருநாட்டின் நோயைத்தீர்க்கப்
பேசுவதும் எழுதுவதும் குற்றமென்று
தனியுடைமைச் சட்டத்தால் தீர்ப்புச்சொல்லும்
தலைமுறைக்குப் புதுப்பாடம் புகட்டவேண்டும்!
அணியணியாய்ப் புறப்படுவோம் தோழரேவாரீர்
அழகுறவே திராவிடத்தை அமைப்போம்வாரீர்!
இனியிதனைத் தடுக்கும்பாதை ஏதேதுளன
விழிப்பூட்டி இதயஒலி எழுப்பவாரீர் !

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

களம்பூர் (போளூர் வட்டம்)

18—12—50ல் தி. மு. க வின் சார்பாக கூட்டிய பொதுக் கூட்டத்திற்கு கே. சுப்ரமணியம் தலைமை வகித்தார். ஆரணி ஆ. ப, நடராசன் பேசியபின், திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவர் ப. உ. ஷண்முகம் அவர்கள் திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும், அரசியலாரின் ஊழல், அடக்குமுறை ஆட்சியைப் பற்றியும், இந்துமதக் கொடுமைகளைப்பற்றியும் 2-மணி நேரம் பேசினார். பிறகு கணேசன் நன்றி கூறியபின் கூட்டம் இனிது முடிந்தது.

வேலூர்

18-12-50 ல் வேலூர் கோட்டை மைதானத்தில் தி. மு. க. சார்பில் தோழர் பாபு அவர்கள் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முகவுரைக்குப் பின் தோழர் வே. அ. இளஞ்செழியன் அவர்கள் பேசுகையில் நாட்டின் பஞ்ச நிலையைக் குறித்தும், சில மாதங்களுக்கு முன் ஒரு தாய் தன் குழந்தை ரூ. 5-க்கு விற்றதிலிருந்து நாட்டின் நிலைமை நன்கு விளங்குகிறது என்பதை எடுத்துக் காட்டிப் பேசினார்.

முடிவாக திராவிடன் ஆசிரியர் என். வி. நடராசன் அவர்கள் ஆட்சியாளர் குன்றத்தூர், நாரணமங்கலத்தில் சர்க்கார் செய்த நடத்தையைக் கண்டித்தும், நெசவாளர் அவல நிலையைக் கவனியாது இருக்கும் அரசியலார் போக்கை விளக்கியும் திராவிட நாடு பிரிய வேண்டிய அவசியத்தை எடுத்துச்சொன்ன பிறகு நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

தேன்காசி

17—12—50ல் தி. மு. க வின் சார்பில் மாபெருங் கூட்டம் கூடியது. அதுபோது இரா. நெடுஞ்செழியன், திராவிட நாடு தனித்து வாழ முடியும் என்பதை நன்கு விளக்கிப் பேசினார். கூட்டத்திற்கு 10,000, மேற்பட்ட மக்கள் ஆவலுடன் கூடியிருந்து அமைதியாக கேட்டனர். பிறகுகழக உறுப்பினர் முகைதீன் அஹமதுசா நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது. தோழர் கருத்தோவியன் தீர்மானங்கள் கொண்டுவந்தார். பிறகு மணியெழிறன் ஆட்சியாளரும், காங்கிரஸ் அன்பர்களும் செய்யும் ஆட்டூழியங்களை விளக்கிப் பேசினார்.

கதரணிந்தவர்களே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல். பெரியார் சொன்னதைப் போல கிணற்றைப் பொது மக்கள் நலத்திற்காகத் தோண்டினால் அதன் ஊற்றுசாக்கடை நீரோடு சம்பந்தப்பட்டிருந்தால் அதைத் தூர்த்துவிடுவதைத்தவிர வேறொன்றும் செய்ய முடியாது. மக்கள் நம்பினார்கள். நம்பிக்கைக்கு எதிரான போக்கில் செல்லுகிறார்கள். அவர்களை அடுத்த தேர்தலில் மண்ணைக் கவ்வும்படி செய்து புத்தி புகட்ட, யோக்கியர்களையும், சேவை மனப்பான்மையுள்ளவர்களையும், ஜாதி, மத பேதமின்றி தேர்ந்தெடுப்பது தான் நாட்டு மக்கள் செய்யவேண்டிய கடமை.

வெற்றிலைப்பாக்கு அதிகமாகப்போடுவதால்

(0)

அனேக வியாதிகள் இங்குக் காணப்படுகின்றன

(0)

இலங்கை பல் டாக்டர் கூறும் விவரம்

சென்னை, டிச 23—

"இப்பொழுது உணவு நிலை சற்றுக் கடுமையாக இருப்பதால், இந்தியாவில் அனேகர் அதிகமாக வெற்றிலையும், பாக்கையும் சாப்பிடுகின்றனர். சிலரை இந்த வழக்கம் அடிமைபடுத்திவிட்டபடியால் ஒரே நாளில் விடாமல் சுமார் 10 மணி நேரம் வரை வெற்றிலை பாக்கு போடுகின்றனர்.

இதனால் அனேக கொடிய வியாதிகள் இந்நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன" என்று கொழும்பு பல் வைத்திய நிபுணர் டாக்டர் டபிள்யூ. பாலந்திரா கூறுகிறார்.

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடுவதால் ஜீரண சக்தி ஒருவரை எப்படிப் பாதிக்கும் என்பதைப் பற்றி டாக்டர் பாலேந்திரா ஆராய்ச்சி செய்து வந்திருக்கின்றார்.

இக்காரியத்தைப் பாராட்டி "எடின்பரோஸர்ஜன் காலேஜில்," இவர் ஒரு 'பெலோ"வாக நியமிக்கப்பட்டிருக்கிறார். சென்னை ராஜ்யத்தில் மக்கள் அதிகமாக வெற்றிலைப் பாக்கு போடுவதால் ஏற்படும் வியாதியைப்பற்றி எவ்வாறு பிரசாரம் செய்து தடுக்க வேண்டுமென்பதைக்குறித்து இவர் சென்னை சர்க்கார் சுகாதார இலாகா டைரக்டருடன் கலந்து பேசுவார்.

டாக்டர் பாலேந்திரா கூறியதாவது:—பிரிட்டிஷ் ஆட்சியின் பொழுது இந்தியாவில் இதைப் பற்றி பிரிட்டிஷ் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வந்தனர். வெற்றிப்பாக்கு, சுண்ணாம்பு முதலியவைகள் நமக்கு நன்மை அளிக்கின்றன. நமது வாயில் உள்ள துர்நாற்றத்தைப் போக்குகின்றன; பற்களைச் சுத்தம் செய்கின்றன.

ஆனால் அவைகளை ஒரு கட்டுப்பாட்டுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும், ஏனெனில், வாயில் புற்றுநோய், வயிற்றில் கோளாறுகள், அஜீர்ண கோளாறுகள் முதலியவைகள் இதனால் ஏற்படுவதுடன் பற்கள் சுயவர்ணத்தை இழக்கின்றன. கொஞ்ச காலம் கழித்த பிறகு பற்கள் ஆட்டம் கொள்கின்றன.

இப்பொழுது கணக்கிட்டுப் பார்த்ததில் மலேயாவிலும், இலங்கையிலும் 100-க்கு 15 பேர்கள் வெற்றிலைப்பாக்கு போடுகின்றனர். அபரிமிதமாக வெற்றிலைப்பாக்கு உட்கொள்வதால் ஏற்படும் வியாதிகள் முதலில் மலபாரிலும், இரண்டாவதாக இலங்கையிலும் தான் அதிகமாகக் காணப்படுகின்றன.

பல ஆண்டுகளுக்கு முன்பு இந்த வழக்கத்தினால் ஏற்படும் வியாதியைக் குறித்து ஆராய்ச்சி செய்து வெளிப்படுத்தியவர் டாக்டர் ஆர். என்ற ஒரு மிஷனரி 1930 வருஷத்தில் "லான்ஸட்" என்ற ஒரு பிரிட்டிஷ் சஞ்சிகையில் அவர் எழுதியதாவது:—

திருநெல்வேலி ஜில்லாவின் சில இடங்களிலும் முக்கியமாக மலபாரிலும் மக்கள் அதிகமாக வெற்றிலை போடுவதுடன், சுண்ணாம்பை நாக்கில் தீட்டுகின்றனர். மிகவும் மட்டரகமான புகையிலையையும் உபயோகிக்கின்றனர். இதனால் இங்குப் புற்றுநோய் அதிகமாகக் காணப்படுகிறது."

இதைப்போன்ற ஆராய்ச்சி பிலிப்பைன்ஸில் டாக்டர் டேவிஸ் என்பவர் 1915-ல் நடத்தி வந்தார் என்றுடாக்டர்பாலேந்திராமுடிவில் கூறினர்.

10 கோடி ரூபாய் சிக்கனம் பிடிக்க

இந்திய அரசாங்க முயற்சி

பொதுவாக ஒரு படைவீரருக்கு ஆண்டு தோறும் ரூ. 3000 செலவாகிறதாம். எனவே தரைப்படையில் 10,000 பேரைக் குறைப்பதன் மூலம் 3 கோடி ரூபாய் மிச்சப்படுத்தப்போவதாக இந்திய அரசாங்கம் முயல்கிறது. அதாவது இந்தியாவின் வருமானம் ரூ. 650 கோடி. இதில் 25 சதவிகிதம் இராணுவத்திற்குச் செலவாகிறது. இதில் மிகச் சிறு அளவு இப்போது குறைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மற்ற இலாக்காக்களையும் சேர்த்தால் நிர்வாகச் செலவில் அடுத்த ஆண்டு ரூ. 7 கோடி மிச்சம் பிடிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. தொழிற்சாலை, சப்ளை இலாக்கா சம்பந்தமான சிக்கனங்கள் மூலம் 2 கோடி ரூபாய் மிச்சமாகுமாம்.

திருப்பூர் சுப்ரமண்யம் மரணம்

திருப்பத்தூர், டிச. 23—

திருப்பத்தூர் நகராண்மைக் கழக தலைவரும், தி. மு. கழக முக்கியஸ்தருமான தோழர் சி. என். சுப்ரமண்யம் இன்று காலை 6 மணிக்கு திடீரென மரணமடைந்தார். இச்செய்தி காட்டுத் தீபோல் நகரமெங்கும் பரவியதும் நகர கடைகள் துக்கத்தின் அறிகுறியாக உடனே மூடப்பட்டது. மாலை 6-30 மணிக்கு மரண ஊர்வலம் பல முக்கிய வீதிவழியாகச் சென்று சுடுகாட்டை இரவு 8 மணிக்கு அடைந்தது மரண ஊர்வலத்தில் சுமார் 10,000 மக்கள் கலந்துகொண்டனர். சில முக்கியஸ்தர்கள் நாயுடுவை பாராட்டி பேசிய பிறகு அடக்கம் இரவு 9-30 மணிக்கு நடைபெற்றது.

பிரதமர் நேருவின் லண்டன் அலுவல்கள்

15 நாட்கள் தங்குவார்

லண்டன், டிச. 23—

இந்திய முதல் அமைச்சர் ஜவஹர்லால் நேரு ஜனவரி 3-ந் தேதி மாலை லண்டன் சேருவார்.

அவர் இரண்டு வார காலம் லண்டனில் தங்குவார் எனத் தெரிகிறது.

காமன்வெல்த் முதலமைச்சர்கள் மாநாடு இதர பெரும் தலைவர்களுடன் சம்பாஷணை இவை தவிர பல உத்யோக வரவேற்பு விருந்துகளில் அவர் கலந்துகொள்ளலாமெனத் தெரிகிறது.

பண்டிட் நேரு பிரிட்டிஷ் மன்னரையும் அரசியையும் ஜனவரி 9-ந் தேதி பக்கிங்காம் அரண்மனையில் சந்திப்பார். 10-ந் தேதி பிரிட்டிஷ் முதலமைச்சர் அளிக்கும் விருந்திலும் 12-ந் தேதி பிரிட்டிஷ் சர்க்கார் அளிக்கும்விருந்திலும் நேரு கலந்து கொள்வார்.

லார்ட் மேயர் அளிக்கும் விருந்திலும், கனடா கிளப், நியூஜிலாந்து சொஸைட்டி, ரொடீஷிய சொஸைட்டி இவைகளின் வரவேற்பிலும் நேரு கலந்துகொள்வார்.

இந்தியா ஹவுஸ் இரு வரவேற்புகளில் ஒன்று ஸ்தானீகர்கள் கூட்டமாகவும்,மற்றொருப் பிரிட்டனில் வசிக்கும் இந்தியர் கூட்டமாகவும் இருக்கும்.

வழக்கம்போல நேரு கிளேரிட்ஜஸ் ஹோட்டலில் தங்குவார். இதே ஹோட்டலில்தான் லியாகத் அலிகானும் அவர் மனைவியும் தங்கவிருக்கின்றனர்.

பூபால இன்னிசை விழா

சென்னை 24-12-50 இரவு 10-30 மணிக்கு ஏகாம்பர குமாரகுரு தெரு, பெரியமெட்டில் நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் தலைமையில் திராவிடப் பாட்டுக்கள் பாடிய வர்களுக்கு வெள்ளிக் கப்புகள் அளிக்கப்படும்.

சினிமா செய்திகள்

மர்மயோகி

விரைவில் வெளியிடத் தயாராகயிருக்கிற ஜுபிடர் தயாரிப்பான இப்படத்தின் கடைசி காட்சிகளெல்லாம்முடிவடைந்துவிட்டன. காமிராவின் பல கோணங்களில் புகுத்தப்பட்டிருக்கும் மாதுரி—அஞ்சலி இப்படத்தின் மூலம் ரசிகர்களின் அமோக ஆதரவை தட்டிக்கொண்டு போவார்கள். பல அரிய காட்சிகளுடன் அமைக்கப்பட்ட இக்கதையை டைரக்டர் சாமி தன் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக யிருக்குமளவுக்கு அமைத்திருக்கிறார்.

சேகரின் டிசைனுடன், ராம்நாத்தின் டைரக்ஷனில் உருவாக்கப்பட்டிருக்கின்றது இப்படம் ஜுபிடரின் தயாரிப்பு என்றால் இப்படத்தின் வெற்றியைப்பற்றி நாம் கூறத் தேவையில்லை.

மணமகள்

எனெஸ்கே பிலிம் சாரால் தயாரிக்கப்படுகிற இப்படத்தின் காட்சிகளில் சில சதரன ஸ்டுடியோவில் சென்ற வாரம் சுடப்பட்டது. சுடப்பட்ட சில காட்சிகளிலே லலிதா "ஏ" கிளாஸ் மார்க்கை தட்டிக்கொண்டு போய்விடுவாராம் இப்படத்தில் தோழர் கருணாநிதியின் கதை வசனமும் டைக்டர் கிருஷ்ணன்—பஞ்சுவின் திறமையும் சேர்ந்த இப்படத்தை தோழர் கிருஷ்ணன்—தமிழ் நாட்டின் தலைசிறந்த படமாக்க திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

பராசக்தி

நேஷனல் பிக்சர்ஸ்-ஏ. வி. எம். ஸ்டுடியோவின் கூட்டு தயாரிப்பான இப்படத்தின் சில காட்சிகள் சென்ற வாரம் ஏ. வி. எம். ஸ்டுடியோவில் காமிராவுக்குள் புகுத்தப்பட்டது. வி. கே ராமசாமி. டி.கே. ராமச்சந்திரன் சம்பந்தமான காட்சிகளெல்லாம் முடிவடைந்து சிவாஜி புகழ் கணேசரின் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகிறதென ஸ்டுடியோவை சுற்றிவந்த நண்பர் ஒருவர் கூறுகிறார்.

இந்தியக் குடியரசுத் தலைவர்

மார்ச்சில் சென்னை வருவார்

சென்னை, டிச. 23—

இந்தியக் குடியரசின் தலைவர் பாபு ராஜேந்திரபிரசாத் மார்ச் மாதத் துவக்கத்தில் சென்னை வந்து இங்கு இரண்டுநாள் தங்குவார் என்று தெரிகிறது. அவரைச் சிறப்பாக வரவேற்கச் சென்னை அரசாங்கம் ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கின்றன.

நாடக கழகம்

24-12-50 ஞாயிறு மாலை 6-மணிக்கு "அந்தமான் கைதி" டி. கே. எஸ். சகோதரர்களால் சென்னை திருவல்லிக்கேணி பெண்கள் உயர் நிலைப்பள்ளி திருமலாச்சார் மண்டபத்தில் நடைபெறும்.

திருந்திய மணம்

கோவில்பட்டி: 13—12—50ல் கடலைகாரத்தெருவில் 6|47 என் இல்லத்தில் தங்கராசா-சரசுவதி வாழ்க்கை ஒப்பந்தம் சிறப்பாக நடைபெற்றது அதுபோது சி. இலக்குவனர். எம். ஓ. எல். அவர்கள் திருந்தியமணம் பற்றி ஆய்உரை நிகழ்த்தினர். நகரின் பெரியோர்களும், நண்பர்களும் மணமக்களை வாழ்த்தினர்.

Edited, Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I.